Secretary's Reference
TAMIL N... 20 DEC 1982 MADRAS-600 009

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1982 மார்ச் 13.

துன்மதி, மாசி 29, திருவள்ளுவர் 2013.

சென்னை சென்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி

முயற்சி, நிறைந்த அறிவு என்று சொல்லப்படும் இரண்டினையும் உடைய இடைவிடாத செயலால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.

1. அறிவிப்பு

இறுதித் துணை நிதி நிலை அறிக்கை.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 205 (1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ் 1981—82 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி நிலை அறிக்கையை, 22—3—1982 ஆம் தேதி திங்கட்கிழமை சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முக்கியமான பிரச்னைகள் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம் மண்டைக்காட்டில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து இன்றைக்கு விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல நீதிமன்றங்களில் தமிழ் மொழி பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறோம். இதுபற்றி மாமன்றத்திலே இருக்கிற அத்தனை கட்சிகளுக்கும் அக்கறை இருக்கிறது, அரசாங்கம் உள்பட. அதை விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா எதிர்க்கட்சிக் காரர்களும் ஒரு கருத்தினை சொல்லியிருக்கிற காரணத்தினாலே ஒரு மணிக்கு இராஜக்காமங்கலம் பிரச்னையை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. இராஜசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 ஆம் தேதி சென்னை விமான நிலையத்தின் முன் பாக நடைபெற்ற போலீஸ் தாக்குதல் குறித்து மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் என்னுடைய உரிமை மீறப்பட்டிருப்பதாக ஒரு பிரச்னையைக் கொடுத்திருக்கிறேன். அதைச் சபையிலே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குத்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்விலே இருக் கிறது.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதி மன்றங்களில் தமிழ் மொழி குறித்த பிரச்னையை திங்கள் கிழமையாவது எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(3) வரவு-செலவுத் திட்டம் 1982–83—வாக்கெடுப்பு

(அ) கோரிக்கை எண் 21—மீனளம்

(ஆ) கோரிக்கை எண் 32—பின் தங்கிய வகுப்பினர்முதலி யோர் நலன்.

(இ) கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி. அடுத்து மானியக் கோரிக்கைகள் 21, 32 மற்றும் 35 ஆகியவற்றின் மீதான விவா தத்திற்குப் பதிலுரை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம், பிற்பட்டோர் நலம், உணவு வளம் பற்றிய மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இந்த மன்ற உறுப்பினர்களுடைய கருத் துக்கள் கேட்கப்பட்டன. அவை பற்றிய விரிவான விளக்கக் குறிப்புகளை அறிக்கைகள் மூலமாகப்பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். அறிக்கைகளிலே அந்தந்த துறைகள் பற்றிய, இதற்கு முன்னாலே நடைபெற்ற பல்வேறு நடவடிக்கை கள் பற்றியும், எடுத்த முடிவுகள் பற்றியும், இனி எடுக்கவிருக்கிற முடிவுகள் பற்றியும், அவற்றிலே விரிவாகவும் விளக்கமாகவும், மிகத் தெளிவாகவும் திட்டமாகவும் பல்வேறு கருத்துக்கள் எடுத் துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அறிக்கைகள் உறுப்பினர்களு டைய உடைமையாக இங்கே அளிக்கப்பட்டிருக்கின்றன. அவற் றைப் பார்ப்பதும், பார்க்காமல் இருப்பதும், அவற்றைப் படிப்